# குத்தகையைத் திரும்ப வாங்கும் திட்டம்

## திட்டம் எவ்வாறு செயல்படுகிறது?

லிம் தம்பதிக்கு 65 வயதாகிறது. இவர்கள் முற்றிலும் பணம் செலுத்தப்பட்ட $450,000 மதிப்புள்ள நான்கு அறை வீட்டின் கூட்டு உரிமையாளர்கள். இந்த வீட்டுக்கு 65 ஆண்டு குத்தகைக் காலம் மீதமிருக்கிறது. இவர்கள் குத்தகையைத் திரும்ப வாங்கும் திட்டத்தின்கீழ் (LBS) 30 ஆண்டு குத்தகைக் காலத்தைத் தக்கவைத்துக் கொண்டு, கடைசி 35 ஆண்டு குத்தகைக் காலத்தை விற்க முடிவு செய்கின்றனர்.




LBS திட்டத்தின் கீழ், கூட்டு உரிமையாளர்களின் நிகர வரவுத்தொகை
**$190,000**

திரு லிம்மின் பங்கு:
**$95,000**

திருமதி லிம்மின் பங்கு:
**$95,000**




லிம் தம்பதியர் நடப்பிலுள்ள திருத்தப்பட்ட வயதுக்கேற்ற அடிப்படைத் தொகை வரை தத்தம் மசேநி ஓய்வுக்காலக் கணக்கில் பணம் நிரப்புவார்கள் (தற்போது $96,000). மீதி $23,000 தொகையை, அவர்கள் ரொக்கமாக வைத்துக்கொள்ளலாம். திரு லிம்மிற்கு $19,000 கிடைக்கும்; திருமதி லிம்மிற்கு $4,000 கிடைக்கும்.

# சுருக்கமாக



குத்தகைக் காலத்தை விற்ற பிறகு, லிம் தம்பதிக்குக் கிடைப்பது:



**$23,000**

மசேநி ஓய்வுக்கால கணக்கில் பணம் நிரப்பிய பின்னர், ரொக்க வரவுத்தொகையாகக் கிடைக்கும்*



**$15,000**

நான்கு அறை வீட்டிற்கான, குத்தகையைத் திரும்ப வாங்கும் திட்டத்தின் கீழ் போனஸ் தொகையாகக் கிடைக்கும்.



**$1,100**
**ஒவ்வொரு மாதமும்**

லிம் குடும்பத்திற்கு மாதந்தோறும் மசேநி லைஃப் வழங்கீடு** கிடைக்கும்

* உத்தேசப் புள்ளிவிவரங்கள் விளக்கம் அளிப்பதற்கானவை மட்டுமே. ஆர்வமுள்ள குடும்பங்கள் வீவக-விடம் நேரடியாக விவரம் கேட்டறியவேண்டும். ஏனெனில், கிடைக்கக்கூடிய வரவுத்தொகை (ரொக்கமாகக் கிடைப்பதும் மசேநி கணக்கில் போடப்படுவதும்), வீட்டின் சந்தை மதிப்பு, எஞ்சியுள்ள வீட்டுக் கடன், உரிமையாளர்களின் எண்ணிக்கை, மசேநி ஓய்வுக்காலக் கணக்கிலுள்ள இருப்புத்தொகை, தக்கவைத்துக்கொள்ளும் குத்தகைக் காலம், உரிமையாளர்களின் வயது ஆகியவற்றைப் பொறுத்திருக்கும்.

** மசேநி லைஃப் திட்டமானது, ஆண்டு சந்தா அடிப்படையிலான ஒரு திட்டம். அது சிங்கப்பூரர்களுக்கும் நிரந்தரவாசிகளுக்கும், அவர்கள் உயிர் வாழ்கின்ற வரையில், மாதந்தோறும் வழங்கீட்டுத் தொகையை அளிக்கும். இந்தத் தொகையானது, மசேநி லைஃப் வழக்கத் திட்டத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு, ஆக, நெருங்கிய $50 தொகைக்கு முழுமையாக்கப்பட்டது.

*டிசம்பர் 2021 நிலவரப்படி*